**செய்தி வெளியீடு எண்: 341** **நாள்: 15.05.2020**

## அரசு மதுபானக் கடைகள் நாளை (16.5.2020) முதல் திறக்கப்படும்

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) அறிவிப்பு

உச்சநீதிமன்ற ஆணையைத் தொடர்ந்து, மதுபானக் கடைகள் நாளை (16.5.2020) முதல் திறக்கப்படும். பெருநகர சென்னை காவல்துறை எல்லை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுபானக் கடைகள் திறக்கப்படமாட்டாது. மேலும், மால்கள், வணிக வளாகங்கள் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இக்கடைகள் இயங்காது. மதுபானக் கடைகள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்படும். நாளொன்றுக்கு ஒரு கடையில் 500 டோக்கன்கள் மட்டுமே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். கடைக்கு வரும் அனைவரும் முகக் கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**